بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلی علی رسولہ الکریم　　وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 19

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

13 ரம்ஜான் 1441 ஹிஜ்ரி கமரி 07 ஹிஜ்ரத் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
07 மே 2020

## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰی رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ ۭ اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ

எங்கள் இறைவா! நீ உன் தூதர்கள் மூலம் எங்களுக்கு வாக்களித்தவற்றை(யெல்லாம்) எங்களுக்குத் தருவாயாக. மேலும் மறுமை நாளில் எங்களை இழிவுபடுத்தி விடாதிருப்பாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதியை மீறுவதில்லை. (3:195)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஒருவர் தனது தீய ஒழுக்கங்களை நல்லொழுக்கங்களிலும் அழகிய நடத்தையிலும் மாற்றிக்கொள்ள முயற்சிக்கவில்லையென்றால் அவரது அக்லாக்கின் போக்கு முற்றிலுமாக விழுந்து விடுகின்றது. ஆனால் அசட்டையும் சோம்பலும் மனிதனின் மீது மேலோங்கி விட்டால் பிறகு அழிவைத் தவிர வேறு என்ன மிச்சமிருக்க முடியும்?**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### லிகுல்லி தாயின் தவாவுன் (ஒவ்வொரு நோய்க்கும் மருத்துவம் உள்ளது) என்பதன் விரிவான விளக்கம்

சில அக்லாக்கின் மாற்றத்தை அவனால் செய்ய முடியும், சிலவற்றை செய்ய முடியாது எனும் விஷயம் சரியில்லை. இல்லையில்லை! ஒவ்வொரு நோய்க்கும் மருத்துவம் உள்ளது. லிகுல்லி தாயின் தவாவுன். பரிதாபம்! மக்கள் இந்த அருளுக்குரிய கூற்றை மதிப்பதில்லை. அதனை வெறும் வெளிப்படையான நோய்களின் வட்டதிற்குட்பட்டதாவே கருதுகின்றனர். இது எந்தளவிற்கு அறிவின்மையும் தவறுமாக இருக்கின்றது. எந்த நிலையில் அழியும் உடலுக்காகவும் அதன் சீர்திருத்தம் மற்றும் நன்மைக்காகவும் அனைத்து பொருள்களும் உள்ளன எனும்போது மனிதனின் ஆன்மீக நோய்களுக்கான மருந்துகள் அல்லாஹ்வின் சந்நிதியில் ஒன்றுமே இல்லாமல் இருக்குமா? இருக்கின்றது! நிச்சயம் இருக்கின்றது!!

இது உண்மையிலேயே ஒரு உறுதியான விஷயமாகும். அதாவது இறைவன் தனக்குத்தானே உதவி செய்துகொள்ளும் அந்த மக்களுக்கு உதவி செய்கின்றான். ஆனால் அசட்டையாகவும் சோம்பேறிகளாகவும் செயலாற்றுபவர்கள் இறுதியில் அழிந்து விடுகின்றனர்.

### வயோதிகத்தின் இரு வகைகள்

மனிதனின் மீது ஒரு பக்கம் நக்ஸ் ஃபில் கல்கி (நல்லொழுக்க குறைபாட்டின்) காலம் வருவதைப்போன்று வயோதிகத்தைக் கூறுகின்றனர். அந்நேரம் கண்கள் தனது பணியைச் செய்வதில்லை. காது கேட்பதில்லை. இவ்வாறு ஒவ்வொரு உடலுறுப்பும் தனது பணியைச் செய்வதிலிருந்து தளர்ந்து செயலிழக்கும் நிலைக்கு அருகே சென்று விடுகின்றது. அவ்வாறே நினைவில் கொள்ளுங்கள், வயோதிகம் இரு வகையில் உள்ளன.

இயற்கை மற்றும் செயற்கை. இயற்கை எதுவென்றால், மேலே கூறப்பட்டுள்ளதாகும். செயற்கை எதுவென்றால் ஒருவர் தனது நோய்களை காரணமின்றி கவனிக்காமல் இருக்கும்போது அது மனிதனை பலகீனமாக்கி முதுமை வரும் நேரத்திற்கு முன்பே (முதுமையாக்கி) விடுகின்றது. உடல் அமைப்பில் இந்த முறை இருப்பதைப் போன்றே அந்தரங்க மற்றும் ஆன்மீக அமைப்பிலும் நடக்கின்றது. ஒருவர் தனது தீய ஒழுக்கங்களை நல்லொழுக்கங்களிலும் அழகிய நடத்தையிலும் மாற்றிக்கொள்ள முயற்சிக்கவில்லையென்றால் அவரது அக்லாக்கின் போக்கு முற்றிலுமாக விழுந்து விடுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்று மற்றும் திருக்குர்ஆனின் போதனையிலிருந்து ஒவ்வொரு நோய்க்கும் மருந்துள்ளது என்பது ஆரம்பத்திலிருந்து நிரூபணமாகிவிட்டது. ஆனால் அசட்டையும் சோம்பலும் மனிதனின் மீது மேலோங்கி விட்டால் பிறகு அழிவைத் தவிர வேறு என்ன மிச்சமிருக்க முடியும்? ஒரு வயோதிகர் வாழ்வதைப் போன்று நிறைவற்ற வாழ்க்கை வாழ்வதால் எவ்வாறு பிழைக்க முடியும்!.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 117,118 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**நேர்மையை நேசிப்போம்**
**நேர்மையின்மையை வெறுப்போம்**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

### காதியான் தாருல் அமானில் தேசிய இஜ்திமாக்களுக்கான தேதி அறிவிப்பு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் இந்தியாவின் கிளை அமைப்புகளின் (மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ்) தேசிய இஜ்திமாக்களை 16,17,18 அக்டோபர் 2020 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள்.

கிளை அமைப்பின் உறுப்பினர்கள் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறும் இந்த இஜ்திமாக்களில் பங்கு பெற இப்போதிருந்தே தயாராகுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம். இந்த இஜ்திமாக்கள் தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த வழியாக இருக்கின்றது.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஒட்டகப் போர் நடைபெற்றதற்கான காரணங்கள், அதன் நிலைமைகள் மற்றும் சம்பவங்கள் ஆகியவை தொடர்பாக எழுகின்ற கேள்விகளுக்கு திருப்திகரமான பதில்**

**ஒட்டகப் போர் நடைபெற்றதற்கு சஹாபாக்களின் எந்த பங்கும் கிடையாது. மாறாக உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்தவர்களின் சூழ்ச்சியினாலேயே இந்தப் போர் நிகழ்ந்தது**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**கொரோனா வைரஸ் காரணமாக தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் நாம் பேண வேண்டிய விஷயங்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் வீட்டை சுத்தமாக வைப்பது மற்றும் அரசாங்கங்கள் தரப்பிலிருந்து வழங்கப்படுகின்ற வழிகாட்டல்களை முழுமையாக பேணி நடப்பது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டண் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 ஏப்ரல் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **03 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்றைய நாட்களின் சூழலுக்கேற்பவும், இங்குள்ள அரசாங்கம் விதித்துத்துள்ள சட்டங்களுக்கேற்பவும் முறையாக மக்களை முன்னால் அமர்த்தியோ அல்லது தொழுகையாளிகளை முன்னால் அமர்த்திக் கொண்டோ என்னால் குத்பா வழங்க முடியாது. சட்டத்தின் வட்டத்திற்குட்பட்டு எத்தனை நபர்களுக்கு அனுமதி உள்ளதோ அதற்கேற்ப பள்ளிவாசலிலிருந்து நான் குத்பா கொடுப்பதற்கு இன்று இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏனென்றால் பள்ளிவாசலில் எனக்கு முன்னால் எவரும் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரியே. ஏனென்றால் உலகில் இப்போது குத்பா கேட்கக் கூடியவர்கள் ஆயிரக்கணக்கிலும், லட்சக்கணக்கிலும் உள்ளனர். பள்ளிவாசலில் எனக்கு முன்னால் எவரும் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சரியே. ஒற்றுமையை நிலைநாட்டுவதற்காக நாம் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் துஆவும் செய்து கொண்டிருக்க வேண்டும்.

அல்லாஹ் இந்த சூழல்களை இன்னும் சிறந்ததாக ஆக்குவானாக. மேலும் இந்த கொள்ளை நோயை அகற்றுவானாக. மேலும் அதேபோன்று பள்ளிவாசலின் பொலிவு மீண்டும் வந்து விடட்டுமாக. இப்போது நான் குத்பாவின் தலைப்பை ஆரம்பம் செய்கின்றேன்.

முந்தைய இரு குத்பாவில் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களைப் பற்றிய குறிப்பு எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஒட்டகப் போரில் நிகழ்ந்த அன்னாரின் ஷஹாதத் சம்பவம் தொடர்பாக எதிர்காலத்தில் கூறுவேன் என்று நான் கூறியிருந்தேன். எனவே இன்று அது தொடர்பாக கூறுவேன். அதில் ஒட்டகப் போர் தொடர்பாக எழுகின்ற சில கேள்விகளுக்கு ஓரளவிற்கு பதிலும் கிடைத்து விடும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது மரணத்திற்கு முன்பாக கிலாஃபத் தொடர்பான கமிட்டி ஒன்றை வடிவமைத்திருந்தார்கள். இது தொடர்பாக சஹீஹ் புகாரியின் ஓர் அறிவிப்பில் இவ்வாறு விளக்கமாக எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய மரண நேரம் அருகில் வந்தது. அப்போது மக்கள், அமீருல் முஃமினீன் அவர்களே! நீங்கள் வஸிய்யத் செய்து விடுங்கள். ஒருவரை கலீஃபாவாக நியமனம் செய்து விடுங்கள் என்று கூறினர். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இந்த கிலாஃபத்திற்கு தகுதி படைத்தவர்களாக இந்த சில நபர்களைத் தவிர்த்து வேறு எவரையும் நான் காணவில்லை. இவர்களிடம் திருப்தி கொண்ட நிலையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்தார்கள் என்று கூறி அன்னார் அவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டார்கள்.

அதாவது ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சஅத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோரின் பெயரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மேலும் கூறினார்கள்: அப்துல்லாஹ் பின் உமர் உங்களுடன் இணைந்திருப்பார். ஆனால் அந்த கிலாஃபத்தில் அவருக்கு எந்த உரிமையும் இருக்காது.

ஆக ஒரு வகையில் அப்துல்லாஹ் அவர்களுக்கு ஆறுதல் வழங்குவதற்காக இவ்விஷயம் கூறப்பட்டது. கிலாஃபத் ஒருவேளை சஅத் அவர்களுக்கு கிடைத்து விட்டால் அவரே கலீஃபாவாக இருப்பார். அவ்வாறில்லையென்றால் உங்களில் எவர் அமீராக ஆக்கப்படுவாரோ அவர் சஅத் அவர்களிடமிருந்து உதவி பெற்றுக் கொள்ளட்டும். ஏனென்றால் சஅத் அவர்கள் ஒரு பணியை செய்ய இயலாதவர்கள் என்பதாலோ, மேலும் அவர்கள் ஏதோ நம்பிக்கை துரோகம் செய்து செய்து விட்டார் என்பதாலோ நான் அவர்களை இதிலிருந்து விலக்கி வைக்கவில்லை.

மேலும் கூறினார்கள்: எனக்குப் பிறகு கலீஃபாவாக ஆக இருப்பவருக்கு முஹாஜிரீன்கள் தொடர்பாக நான் அறிவுரை செய்கின்றேன். அவர் அவர்களின் உரிமைகளையும், அவர்களின் கண்ணியத்தையும் வழங்க வேண்டும். மேலும் நான் அன்ஸார்கள் தொடர்பாகவும் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு அறிவுரை செய்கின்றேன். அன்ஸார்கள் முஹாஜிரீன்களுக்கு முன்பாகவே தத்தமது வீடுகளில் ஈமானிற்கு இடமளித்தார்கள். அவர்களில் பணி செய்யக் கூடியவர்களை ஒப்புக் கொள்ள வேண்டும். மேலும் அனைத்து நகரத்தின் குடிமக்களுடனும் நல்ல முறையில் நடப்பதற்கும் அறிவுரை செய்கின்றேன். ஏனென்றால் அவர் இஸ்லாத்தின் கேடயமாவார். மேலும் செல்வத்தை வசூல் செய்பவர் ஆவார். மேலும் அவர்களின் திருப்தியுடன் அவர்களின் தேவைகளுக்குப் பிறகு எஞ்சியிருப்பதிலிருந்தே செல்வம் பெறப்பட

வேண்டும். மேலும் நான் காட்டரபிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கும் அறிவுரை செய்கின்றேன். ஏனென்றால் அவர்கள் அரேபியர்களின் ஆணி வேர் ஆவர். மேலும் அவர்களிடமிருந்து அவர்களுக்கு பயன் பெறாத செல்வத்திலிருந்து வசூல் செய்யப்பட்டு அவர்களில் தேவையுடையவர்களுக்கே அது வழங்கப்பட வேண்டும். மேலும் நான் இவ்விவகாரத்தை அல்லாஹ்வுடைய பொறுப்பிலும் அவனுடைய தூதரின் பொறுப்பிலும் விட்டு விடுகின்றேன்.

மேலும் எவர்களிடம் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதோ அவர்களுடன் அந்த உடன்படிக்கை முழுமை செய்யப்பட வேண்டும். மேலும் அவர்களின் பாதுகாப்பிற்குரிய நடவடிக்கை செய்யப்பட வேண்டும். மேலும் அவர்களின் ஆற்றல்களுக்கேற்பவே அவர்களிடமிருந்து பெறப்பட வேண்டும்.

அன்னார் மரணமடைந்துவிட்டபோது நாங்கள் அன்னாரை எடுத்துக் கொண்டு சென்றோம். மேலும் நடந்தே சென்றோம். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். மேலும் உமர் பின் கத்தாப் அனுமதி வேண்டுகின்றார்கள் என்றும் கூறினார்கள். அதற்கு அன்னாரை உள்ளே கொண்டு வரும்படி அவர்கள் கூறினார்கள்.

ஆக அன்னார் உள்ளே எடுத்துச் செல்லப்பட்டார்கள். மேலும் அன்னாருடைய இரண்டு நண்பர்களுடன் அங்கு வைக்கப்பட்டார்கள். அன்னாருடைய நல்லடக்கம் முடிவடைந்த பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தார்களோ அவர்கள் அனைவரும் ஒன்றுகூடினர்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள், நான் எனது விவகாரத்தை நம்மவர்களில் மூன்று நபர்களிடம் ஒப்படைத்து விடுகின்றேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சுபைர் அவர்கள், நான் எனது உரிமையை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுக்கு வழங்கி விட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் உங்களில் எவர் இவ்விவகாரத்திலிருந்து விலகி விடுவாரோ நாங்கள் அவர்களிடமே இந்த விவகாரத்தை ஒப்படைத்து விடுவோம் என்று கூறினார்கள். மேலும் அல்லாஹ் அவரின் பாதுகாவலனாகவும் இருப்பான் என்று கூறினார்கள். மேலும் அவர்களில் எவர் அல்லாஹ்வின் பார்வையில் சிறந்தவராக இருப்பாரோ அவரையே அல்லாஹ் தேர்ந்தெடுப்பான் என்றும் கூறினார்கள்.

இந்த விஷயம் இரண்டு சான்றோர்களையும் மௌனமாக்கி விட்டது. அதாவது அவர்கள் எந்த பதிலும் வழங்கவில்லை.

பின்னர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள், நீங்கள் இந்த விவகாரத்தை என்னிடத்தில் ஒப்படைக்கின்றீர்களா? என்று கேட்டார்கள். மேலும் அல்லாஹ் கண்காணிப்பவனாக இருக்கின்றான். உங்களில் எவர் சிறந்தவரோ அவரை தேர்ந்தெடுப்பது தொடர்பாக நான் எந்த குறைவும் செய்ய மாட்டேன் என்று கூறினார்கள். அவர்கள் இருவரும், நல்லது. அப்படியே ஆகட்டும் என்று கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள், அவர்களில் ஒருவரின் கரத்தை பிடித்து தனிமையில் அழைத்துச் சென்றார்கள். உங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இரத்த உறவு இருக்கின்றது. மேலும் இஸ்லாத்தில் உங்களுக்கு இருக்கின்ற அந்தஸ்தையும் நீங்கள் அறிவீர்கள். அல்லாஹ் உங்களின் பாதுகாவலனாக இருக்கின்றான். நான் உங்களை அமீராக ஆக்கி விட்டால் நீங்கள் கண்டிப்பாக நீதம் செய்வீர்களா? மேலும் ஒருவேளை நான் உஸ்மான் அவர்களை அமீராக ஆக்கினால் நீங்கள் அவர்களது விஷயங்களை கேட்பீர்களா? மேலும் அவர்களின் கட்டளை ஏற்பீர்களா? என்று கேட்டார்கள்.

பின்னர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் இரண்டாம் நபரையும் தனிமையில் அழைத்துச் சென்றார்கள். அவரிடமும் அதே விஷயங்களை கூறினார்கள். அன்னார் உறுதியான வாக்குறுதியை பெற்று விட்ட பிறகு, உஸ்மான் அவர்களிடம் தனது கரத்தை நீட்டுமாறு கூறினார்கள். மேலும் அன்னாரிடம் பைஅத் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் அன்னாரிடம் பைஅத் செய்தார்கள். மேலும் குடும்பத்தினரும் உள்ளே வந்தார்கள். அவர்களும் அன்னாரிடம் பைஅத் செய்தார்கள். இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில், ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்)... ஹதீஸ் எண் **3700**)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் தேர்ந்தெடுப்பு தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தவாறு இந்த சம்பவத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காயப்பட்டபோது தனது இறுதி நேரம் நெருங்கி விட்டதாக உணர்ந்தார்கள். அன்னார் ஆறு நபர்கள் தொடர்பாக வஸிய்யத் செய்தார்கள். அவர்கள் தங்களில் ஒருவரை கலீஃபாவாக நியமித்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். அந்த ஆறு நபர்கள் இவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் சஅத் பின் வக்காஸ் (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) ஆகியோர் ஆவர்.

அவர்களுடன் அப்துல்லாஹ் பின் உமர் அவர்களையும் அந்த ஆலோசனையில் கலந்து கொள்வதற்காக அன்னார் நியமனம் செய்தார்கள். ஆனால் கிலாஃபத்திற்கு அவர் உரிமை படைத்தவர் இல்லை என்றும் கூறியிருந்தார்கள். மேலும் இந்த மக்கள் மூன்று நாட்களில் முடிவெடுக்க வேண்டும் என்றும் வஸிய்யத் செய்தார்கள். மேலும் இந்த மூன்று நாட்களுக்கு ஷுஹைப் அவர்களை இமாமுஸ் ஸலாத்தாக நியமித்தார்கள். மேலும் ஆலோசனை கூட்டத்தின் பாதுகாப்பு பணியை மிக்தாத் பின் அஸ்வத் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். மேலும் அவர்கள் அனைவரையும் ஓரிடத்தில் ஒன்று கூட்டி ஒரு முடிவெடுக்க நிர்பந்திக்க வேண்டும் என்றும் வழிகாட்டியிருந்தார்கள். மேலும் அவர் சுயமே வாள் ஏந்தி பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்கள்.

பெரும்பாலான கருத்தின் அடிப்படையில் எவர் தேர்ந்தெடுக்கப்படுவாரோ அவரிடம் அனைத்து மக்களும் பைஅத் செய்ய வேண்டும். மேலும் எவர் பைஅத் செய்ய மறுப்பாரோ அவரை கொலை செய்து விட வேண்டும் என்றும் அன்னார்

## திருக்குர்ஆனிலிருந்து...

உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து இறக்கப்பட்டதை நீங்கள் பின்பற்றுங்கள். அவனைத்தவிர பிறரைப் பாதுகாவலர்களாகப் பின்பற்றாதீர்கள். நீங்கள் அறிவுரையினை அறவே பெறுவதில்லை. **(7:4)**

Faizal Hameed Ilahi, Tittacherry

கூறியிருந்தார்கள். ஆனால் ஒருவேளை இரண்டு பக்கமும் மூன்று மூன்று நபர்கள் என்ற நிலை உருவாகி விட்டால் அந்நிலையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் அவர்களில் எவரை கலீஃபாவாக குறிப்பிடுவார்களோ அவர்கள் கலீஃபாவாக இருப்பார்கள் என்றும் கூறினார்கள். மேலும் ஒருவேளை அவர்கள் இந்த தீர்ப்பில் திருப்தி கொள்ளவில்லை என்றால் பின்னர் அப்துர் ரஹ்மான் வின் அவ்ஃப் அவர்கள் எவரை கலீஃபாவாக குறிப்பிடுவார்களோ அவர் கலீஃபாவாக இருப்பார் என்றும் வஸிய்யத் செய்தார்கள்.

இதில் ஐந்து சஹாபாக்கள் மட்டுமே அந்த ஆலோசனையில் ஈடுபட்டார்கள். ஏனென்றால் தல்ஹா அவர்கள் அப்போது மதீனாவில் இல்லாமல் இருந்தார்கள். ஒரு நீண்ட விவாதத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் வின் அவ்ஃப் அவர்கள் எவர் தனது பெயரை திரும்ப பெற்றுக் கொள்ள விரும்புகின்றாரேரலா அவர் திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்று கூறினார்கள். அனைவரும் மௌனமாக இருந்தபோது முதலில் நான் எனது பெயரை திரும்ப பெற்றுக் கொள்கின்றேன் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள். மற்ற இருவரும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் மௌனமாக இருந்தார்கள்.

இறுதியில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள், இந்த விவகாரத்தில் முடிவெடுப்பதில் எந்த சலுகையும் காட்ட மாட்டேன் என்று உடன்படிக்கை செய்து கொண்டார்கள். மேலும் அனைத்து பணிகளும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் மூன்று நாட்கள் மதீனாவின் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்றார்கள்.

ஆண்களிடமும், பெண்களிடமும் சென்று கேட்டார்கள். எந்த நபரின் கிலாஃபத்திற்கு ஆதரவாக அவர்களின் கருத்து உள்ளது என்பதை கேட்டறிந்தார்கள். அனைவரும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் எங்களுக்கு ஏற்புடையதாகும் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஆதரவாக தனது தீர்ப்பை வழங்கினார்கள். மேலும் அன்னார் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம் தொகுத 15 பிக்கம் 488–489)

ஆக இதுவே வரலாற்று அடிப்படையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிய விஷயமாகும்.

புகாரியின் விளக்கவுரையான ஃபத்ஹுல் பாரியில் எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வஸிய்யத் செய்த நேரத்தில் அங்கு இருக்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணம் நிகழ்ந்த பிறகு அவர்கள் அங்கு வந்திருக்க வாய்ப்பு உள்ளது. மேலும் ஆலோசனை கூட்டம் முடிந்த பிறகு தான் அவர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது.

மற்றொரு அறிவிப்பு அதுவே மிகவும் சரியானதாக தெரிகின்றது. அதன் அடிப்படையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் பைஅத் வாங்கப்பட்ட பிறகு அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

(ஃபத்ஹுல் பாரி ஷரஹ் சஹிஹுல் புகாரி தொகுதி 7 பக்கம் 69, கிதாப் ஃபஸாயிலுன் நபி (ஸல்) ஹதீஸ் எண் 3700(

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பின்னர் இந்த அமைப்பு இயல்பு நிலைக்கு திரும்பியது.

ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் ஷஹீதானபோது அனைத்து மக்களும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஓடோடி வந்தார்கள். அவர்களில் சஹாபாக்களும், தாபியீன்களும் பங்கு பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரும், அமீருல் முஃமினீன் அலி அவர்களே! என்று கூறினார்கள். எந்த அளவுக்கு என்றால் அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் வீட்டில் ஒன்று கூடினார்கள். மேலும் நாங்கள் உங்களிடம் பைஅத் செய்கின்றோம் என்றும் கூறினார்கள். மேலும் நீங்கள் உங்கள் கரத்தை நீட்டுங்கள் என்றும் மக்கள் வேண்டினர். ஏனென்றால் நீங்கள்தான் இதற்கு அதிக தகுதி படைத்தவர் ஆவீர்கள் என்றும் கூறினர்.

அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், இது உங்களின் வேலை அல்ல என்று கூறினார்கள். மாறாக, இது பத்ர் போர் சஹாபாக்களின் பணியாகும் என்றும் கூறினார்கள். எவரின் மீது பத்ர் போர் சஹாபிகள் திருப்தி கொள்வார்களோ அவரே கலீஃபாவாக இருப்பார் என்றும் கூறினார்கள்.

எனவே பத்ர் போர் சஹாபிகள் அனைவரும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் வந்தார்கள். மேலும் உங்களை விட இதற்கு உரிமை படைத்தவராக வேறு எவரையும் நாங்கள் பார்க்கவில்லை என்றும் நீங்கள் உங்கள் கரத்தை நீட்டுங்கள். நாங்கள் உங்களிடம் பைஅத் செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள்.

மேலும் தல்ஹா மற்றும் சுபைர் அவர்கள் எங்கே? என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கேட்டார்கள். எல்லோரையும் விட முதலில் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் வாய்மொழியாக பைஅத் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அன்னாரின் கையில் பைஅத் செய்தார்கள்.

இதை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கண்டபோது அன்னார் பள்ளிவாசலுக்கு சென்றார்கள். மேடையில் நின்றார்கள். முதல் முதலில் அன்னாரிடத்தில் வந்த நபர் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் அவர்களிடம் பைஅத் செய்தார்கள். அன்னாருக்குப் பிறகு ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும், ஏனைய சஹாபாக்களும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா லாபின் அஸீர் தொகுதி 4 பக்கம் 107 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி) மற்றும ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்களா? இல்லையா? என்பது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள். இதைப் பற்றி காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களின் சில ஆட்சேபனைகளுக்கு பதில் வழங்கியவாறு அன்னார் தனது ஒரு சொற்பொழிவில் குறிப்பிடுகின்றார்கள். நான் ஏன் எடுத்துரைக்கின்றேன் என்றால்

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நாம் உங்களைப் படைத்தோம். பின்னர் உங்களை வடிவமைத்தோம். பின்னர் வானவர்களிடம் ஆதமுக்குக் கீழ்ப்படியுங்கள் என்றோம். இதற்கு வானவர்கள் (ஆதமுக்குக்) கீழ்ப்படிந்தனர். ஆனால் இப்லீஸ் (கீழ்ப்படிய)வில்லை. அவன் கீழ்ப்படிந்து நடப்பவர்களைச் சார்ந்தவன் இல்லை. (7:12)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

இந்த குறிப்பை எடுத்துரைப்பது மிகவும் அவசியமாகும்.

ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) ஆகியோர் பையத் செய்யவில்லை என்பதை நீங்கள் ஆதாரமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று காஜா சாஹிப் அவர்களிடம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். அந்த சஹாபாக்கள் கிலாஃபத்தை நிராகரிக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையாளிகளைப் பற்றியே கேள்வியே அப்போது இருந்தது.

நான் மீண்டும் உங்களுக்கு கூறுகின்றேன். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் அவர்கள் பைஅத் செய்யவில்லை என்று எவர் உங்களிடம் கூறினாரோ அவர் தவறிழைத்திருக்கின்றார். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தனது தவறை ஒப்புக் கொண்டு மதீனா சென்று விட்டார்கள். தல்ஹா (ரலி) மற்றும் சுபைர் (ரலி) அவர்கள் பைஅத் செய்யாதவரை மரணிக்கவும் இல்லை. எனவே சில ஆதாரங்கள் கீழே தரப்படுகின்றன.

கலாயிஸ் குபுரா தொகுதி ஒன்றில் இந்த ஆதாரம் இடம் பெற்றுள்ளது.

ஹாகிம் அவர்கள் இந்த அறிவிப்பை செய்கின்றார்கள். அரபி பகுதி ஒன்று உள்ளது. நான் அதன் மொழியாக்கத்தை மட்டும் படிக்கின்றேன்.

ஹாகிம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சவ்ர் பின் நஜ்ஸா என்னிடத்தில் இவ்வாறு கூறினார்கள்: ஒட்டகப் போர் நாளன்று நான் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களைக் கடந்து சென்றேன். அப்போது அன்னார் மரண தருவாயில் இருந்தார்கள். அவர்கள் என்னிடத்தில், நீங்கள் எந்த கூட்டத்தைச் சார்ந்தவர் ஆவீர்கள் என்று கேட்டார்கள். அப்போது நான் ஹஸ்ரத் அமீருல் முஃமினீனாகிய ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கூட்டத்தைச் சார்ந்தவன் ஆவேன் என்று கூறினேன்.

அதற்கு அவர்கள், நல்லது. நீங்கள் உங்களது கரத்தை நீட்டுங்கள். நான் உங்களிடம் பைஅத் செய்கின்றேன் என்று கூறினார்கள். எனவே அன்னார் எனது கரத்தில் பைஅத் செய்தார்கள். பின்னர் அன்னார் மரணமடைந்தார்கள். பின்னர் நான் திரும்பி வந்து நடந்த அனைத்து விஷயத்தையும் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அல்லாஹு அக்பர் என்று கூறியவாறு இறை தூதரின் கூற்று உண்மை என நிரூபணமாகி விட்டது என்று கூறினார்கள். மேலும் என்னிடம் பைஅத் செய்யாமல் தல்ஹா (ரலி) அவர்கள் சொர்க்கத்திற்கு செல்வதை அல்லாஹ் விரும்பவில்லை என்று கூறினார்கள். அன்னார் சொர்க்கத்திற்குரிய நற்செய்தி வழங்கப்பட்ட பத்து நபர்களில் ஒருவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் ஒரு முறை ஒட்டகப் போர் சம்பவம் பற்றி கூறப்பட்டது. அப்போது அந்த குறிப்பைக் கேட்ட கேட்ட ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மக்கள் ஒட்டகப் போர் சம்பவம் பற்றி பேசுகின்றார்களா? என்று கேட்டார்கள். யாரோ ஒருவர் ஆம் என்று கூறினார்.

அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அன்றைய நாளன்று எவ்வாறு மற்ற அனைவரும் அமர்ந்திருந்தார்களோ நானும் அவ்வாறே அமர்ந்திருந்தால் மிகவும் சிறந்ததாக இருந்திருக்கும் என்று கூறினார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக பத்து பிள்ளைகளைப் பெற்று அவர்களில் ஒவ்வொரு பிள்ளையும் அப்துர் ரஹ்மான் பின் ஹாரிஸ் பின் ஹஷ்ஷாம் அவர்களைப் போன்று இருக்க வேண்டும் என்ற ஆசையை விட மிக அதிகமாக இந்த ஆசையே எனக்கு அதிகமாக உள்ளது என்று கூறினார்கள்.

பின்னர் அடுத்த விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் நற்செய்தி பெற்ற பத்து நபர்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அதாவது அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொர்க்கத்திற்குரிய நற்செய்தியை வழங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்செய்தி உண்மையானதாக இருப்பது உறுதியாகும். பின்னர் இதுமட்டுமல்ல. அவர்கள் சண்டையிலிருந்து தவ்பா செய்து விட்டார்கள்.

(அகுல்ல் ஃபஸல், அன்வாருல் உலூம் தொகுதி 2 பக்கம் 318,319)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதற்கான சான்றையும் வழங்கி இருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் ஷஹாதத், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் பைஅத் மற்றும் ஒட்டகப் போரைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையாளிகள் பல்வேறு ஊர்களில் பரவி இருந்தார்கள். குற்றச்சாட்டுகளிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக பிறர் மீது குற்றம் சுமத்தி வந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் முஸ்லிம்களிடம் பைஅத் வாங்கி விட்டார்கள் என்பதை அவர்கள் அறிந்தபோது அன்னார் மீது ஆட்சேபனை செய்வதற்கு அவர்களுக்கு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு அக்கம் பக்கத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையாளிகளில் சிலர் ஒன்றுகூடி இருந்தனர் என்பதும் உண்மையாகும். எனவே அந்த எதிரிகளுக்கும், நயவஞ்சகர்களுக்கும் ஆட்சேபனை செய்வதற்கு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்து விட்டது.

எனவே அவர்களில் எவர்கள் மக்காவிற்கு சென்றார்களோ அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை இந்த அறிவிப்பை செய்யும்படி வைத்தார்கள். அதாவது அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இரத்தத்திற்கு பழிவாங்குவதற்கு ஜிஹாதிற்கான அறிவிப்பைச் செய்தார்கள். எனவே அவர்களும் இந்த அறிவிப்பைச் செய்தார்கள். மேலும் சஹாபாக்களை தமது உதவிக்காக அழைத்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் இந்த நிபந்தனையின் அடிப்படையிலேயே பைஅத் செய்திருந்தார்கள்.

அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையாளிகளை மிக விரைவாக பழி வாங்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். அவர்கள் அவசரம் என்பதற்கு என்ன பொருளை புரிந்து வைத்திருந்தார்களோ அது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் பார்வையில் எதிரானதாக இருந்தது. ஹஸ்ரத் அலி

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக: என் இறைவன் எனக்கு நீதியைக் (கடைப்பிடிக்குமாறு) கட்டளையிட்டுள்ளான். மேலும் நீங்கள் வணக்கத்தலம் ஒவ்வொன்றிலும் உங்கள் முகங்களை நேரான திசையில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் மார்க்கத்தில் உங்களை அவனுக்காகக் களங்கமற்றவர்களாய் ஆக்கிக் கொண்ட நிலையில் அவனையே அழையுங்கள். (7:30)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

(ரலி) அவர்கள் அனைத்து மாநிலங்களிலும் முதலில் ஏற்பாடுகளை சரி செய்து விட்டு பின்னர் கொலையாளிகளுக்கு தண்டனை வழங்குவதன் பக்கம் கவனம் செலுத்தலாம் என்று எண்ணினார்கள். ஏனென்றால் இஸ்லாத்தின் பாதுகாப்பே முதன்மையானதாக இருந்தது. கொலையாளிகளுக்கு தண்டனை வழங்குவதில் காலதாமதம் ஆவதால் பாதிப்பு எதுவும் இல்லை என்று அவர்கள் கருதினார்கள்.

மேலும் அதேபோன்று கொலையாளிகளை அடையாளம் காண்பதிலும் கருத்து வேறுபாடு இருந்தது. எந்த மக்கள் தங்களது முகங்களை சோகமாக வைத்துக் கொண்டு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் சென்று இஸ்லாத்தில் பிரிவினை ஏற்பட்டு விடுவதற்கான அச்சத்தை வெளிப்படுத்தினார்களோ அவர்களைப் பற்றி இவர்கள் குழப்பத்தின் தோற்றுநர்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு சந்தேகம் ஏற்படவில்லை. ஆனால் மற்றவர்கள் அவர்கள் மீது சந்தேகம் கொண்டு வந்தனர்.

இந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் தனது வாக்குறுதியிலிருந்து விலகி விட்டதாக கருதினார்கள். அவர்கள் ஒரு நிபந்தனையின் அடிப்படையில் பைஅத் செய்திருந்தார்கள். அந்த நிபந்தனையை அவர்களின் எண்ணத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பூர்த்தி செய்யவில்லை. எனவே ஷரீஅத்தின் அடிப்படையில் அவர்கள் தங்களை பைஅத்திலிருந்து சுதந்திரமானவர்களாக கருதிக் கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பும் அவர்களை வந்தடைந்தபோது இவர்களும் அவர்களுடன் இணைந்து கொண்டார்கள். அதாவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் இணைந்து கொண்டார்கள். மேலும் அனைவரும் சேர்ந்து பஸ்ராவிற்கு சென்று விட்டார்கள்.

பஸ்ராவின் கவர்னர் அவர்களை சந்திப்பதிலிருந்து மக்களை விலக்கி வைத்தார். ஆனால் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் ஒரு நிபந்தனையின் அடிப்படையில்தான் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள் என்று மக்களுக்கு தெரிய வந்தபோது பெரும்பாலான மக்கள் அவர்களுடன் இணைந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு இந்த படையை பற்றி தெரிய வந்தபோது அவர்களும் ஒரு படையை தயார் செய்தார்கள். மேலும் பஸ்ராவை நோக்கி புறப்பட்டார்கள்.

பஸ்ராவை வந்தடைந்ததும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) ஆகியோரிடம் ஒரு நபரை அனுப்பி வைத்தார்கள். அந்த நபர் முதலில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் சென்றார். மேலும் தங்களின் எண்ணம் என்ன? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், எனது எண்ணம் சீர்திருத்தம் மட்டுமே ஆகும் என்று கூறினார்கள்.

அதற்குப் பிறகு அந்த நபர் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களையும் அழைத்தார். நீங்களும் இதற்காகவா போருக்கு ஆயத்தமாகி இருக்கின்றீர்கள் என்று அவர்களிடம் கேட்டார். ஆம். இதே காரணம்தான் என்று அவர்கள் கூறினர். உங்களின் நோக்கம் சீர்திருத்தம்தான் என்றால் அதற்கு நீங்கள் மேற்கொண்டுள்ள வழிமுறை சரியல்ல. இதன் விளைவு குழப்பமாகும். தற்போது நாட்டில் நிலவும் சூழல் எப்படி உள்ளது என்றால் நீங்கள் ஒருவரை கொலை செய்தால் அவருக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கானோர் எழுவார்கள். மேலும் போரிடுவார்கள். அந்நிலையில் மேலும் அதிகமான மக்கள் அவரின் உதவிக்காக வந்து விடுவார்கள்.

எனவே சீர்திருத்தம் என்பது என்னவென்றால் நாட்டை ஒற்றுமையின் கயிற்றால் கட்ட வேண்டும். அதன் பின்னர் தீயவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் அப்படிப்பட்ட நிலையில் தண்டனை வழங்கினால் அது நாட்டில் மேலும் குழப்பத்தை விளைவிக்கும். முதலில் அரசாங்கம் நிலைபெறட்டும். பிறகு அது தண்டனை வழங்கப்படும் என்று கூறினார்.

இதைக் கேட்ட அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் நோக்கம் இதுவே என்றால் அவர்கள் வந்து விடட்டும். நாங்கள் அவர்களுடன் இணைந்து விட ஆயத்தமாக இருக்கின்றோம் என்று கூறினர்.

அந்த நபர் இந்த தகவலை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு தெரிவித்தார். இரு தரப்பு பிரதிநிதிகளும் ஒருவர் மற்றவரை சந்தித்தனர். போர் புரிவது சரியல்ல. சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

இந்த செய்தி அப்துல்லாஹ் பின் சபாவின் கூட்டத்தினருக்கும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையாளிகளுக்கும் சென்றடைந்தபோது அவர்களுக்கு கடுமையான பதற்றத்தை ஏற்படுத்தியது. இரகசியமாக அவர்களில் ஒரு கூட்டத்தினர் ஆலோசனை செய்ய ஒன்று கூடினர். முஸ்லிம்களுக்கிடையில் சமாதானம் ஏற்பட்டு விட்டால் அது நமக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் முஸ்லிம்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் வரைதான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்ததற்கான தண்டனையிலிருந்து நம்மால் தப்பித்திருக்க முடியும். ஒருவேளை சமாதானம் ஏற்பட்டு அமைதி ஏற்பட்டு விட்டால் நம்மால் தப்பிக்கவே முடியாது. எனவே எப்படியாவது சமாதானம் ஏற்பட விட்டுவிடக்கூடாது என்று அவர்கள் ஆலோசனையில் முடிவெடுத்தார்கள்.

இதற்கிடையில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் வந்தடைந்தார்கள். அன்னார் வந்தடைந்த பிறகு இரண்டாவது நாளன்று அன்னாரும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும் சந்தித்தார்கள். சந்திப்பின்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எனக்கெதிராக போரிடுவதற்கு படையை ஆயத்தம் செய்து விட்டீர்கள். ஆனால் இறைவன் முன்னிலையில் அதற்கான காரணத்தை கூறுவதற்கு தயாராகி விட்டீர்களா?

எந்த இஸ்லாத்திற்கு நீங்கள் உயிரை கொடுத்து தொண்டாற்றினீர்களோ அதனை நீங்கள் உங்களது கரத்தாலே அழிப்பதற்கு ஏன் ஆயத்தமாகி விட்டீர்கள்? நான் உங்கள் அனைவரின் சகோதரன் இல்லையா? இதற்கு முன்பு ஒருவருக்கு மற்றவரின் இரத்தம் ஹராமாக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அது ஆகுமானதாகி விட்டதா? இதற்கு என்ன காரணம்? ஒருவேளை ஏதாவதொரு புதிய விஷயம் உருவாகி இருந்தால் அப்போது கூட

**திருக்குர்ஆனிலிருந்து...**

(மறுமை நாளாகிய) அந்நாளில் எல்லாச் செயல்களையும் எடை போடுதல் உண்மையாகும். அச்சமயம் எவருடைய (செயல்களின்) எடை அதிகமாய் இருக்குமோ, அவர்களே வெற்றியாளர்கள். (7:9)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

ஆகுமானதாகும். எந்தவொரு புதிய விஷயமும் தோன்றிடாதபோது பின்னர் இந்த போர் எதற்காக என்று கேட்டார்கள்.

பின்னர் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களுடன் இருந்த ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் கூறினார்கள்: தாங்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்யும்படி மக்களை தூண்டி விட்டீர்கள் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்வதில் பங்கு பெற்ற நபர்களை நான் சபிக்கின்றேன் என்று கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: உங்களுக்கு நினைவில்லையா? ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இறைவன் மீது ஆணையாக! நீர் அலிக்கு எதிராக போரிடுவீர். மேலும் நீர் அந்நிலையில் அநீதியாளராக இருப்பீர் என்று கூறினார்கள்.

இதனைக்கேட்ட ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள், தனது படையை நோக்கி திரும்பி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் ஒருபோதும் போர் செய்ய மாட்டேன் என்று சத்தியம் செய்தார்கள். மேலும் புரிதலில் தனக்கு தவறு ஏற்பட்டு விட்டதாக ஒப்புக் கொண்டார்கள்.

இந்த செய்தி படையில் பரவியபோது இனி போர் நடைபெறாது என்று அனைவருக்கும் மன நிறைவு ஏற்பட்டது. மேலும் சமாதானம் ஏற்பட்டு விடும் என்றும் கருதினார்கள். ஆனால் குழப்பவாதிகளுக்கு மிகுந்த பதற்றம் ஏற்பட்டிருந்தது. இரவு வந்தபோது அவர்கள் சமாதானத்தை தடுத்து நிறுத்துவதற்காக திட்டம் தீட்டினார்கள். அவர்களில் எவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் இருந்தார்களோ அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களின் படையின் மீது இரவு நேரத்தில் தாக்குதல் நடத்தினார்கள்.

மேலும் அவர்களின் படையில் இருந்தவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் படையினர் மீது தாக்குதல் தொடுத்தனர். அதன் விளைவு என்னவாயிற்று என்றால் ஒரு பெரும் குழப்பம் ஏற்பட்டது. மேலும் ஒவ்வொரு பிரிவினரும் தம்மை எதிர்தரப்பினர் ஏமாற்றி விட்டதாக கருதினர். ஆனால் உள்ளபடியே உண்மை என்னவென்றால் இது கிளர்ச்சியாளர்களின் ஒரு திட்டமாக இருந்தது.

போர் மூண்டபோது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் குரல் கொடுத்தார்கள். யாராவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு தகவல் கொடுங்கள். அன்னார் மூலமாக அல்லாஹ் இந்த குழப்பத்தை அகற்றி விடலாம் என்று கூறினார்கள்.

எனவே ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஒட்டகம் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. ஆனால் விளைவு மேலும் அபாயகரமாகி விட்டது. நமது திட்டம் நமக்கு எதிராகி விட்டது என்பதை உணர்ந்த குழப்பவாதிகள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஒட்டகத்தின் மீது அம்பு எய்ய தொடங்கி விட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூக்குரலிட்டு மக்களே! போரை கைவிட்டு விடுங்கள். இறைவனையும், மறுமையையும் நினைவில் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் குழப்பவாதிகள் பின்வாங்கவில்லை. தொடர்ந்து அன்னாரின் ஒட்டகத்தின் மீது அம்பை எய்து கொண்டே சென்றோர்கள்.

பஸ்ராவாசிகளின் படைகளும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை சுற்றி ஒன்று கூடியிருந்தது. அவர்களுக்கு இதை பார்த்ததும் கடுமையான கோபம் வந்தது. உம்முல் முஃமினீன் அவர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அவமரியாதையைக் கண்டு அவர்களின் கோபம் கட்டுப்பாட்டை இழந்தது. அவர்கள் வாளை உருவிக் கொண்டு எதிர்படையினர் மீது தாக்குதல் தொடுத்தனர்.

தற்போது என்ன சூழல் உருவானது என்றால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஒட்டகம் போரின் மையப் பகுதியாக மாறியது. சஹாபாக்களும் பெரும் பெரும் வீரர்களும் அதை சுற்றி ஒன்று கூடினர். ஒருவருக்குப் பிறகு மற்றொருவர் கொலை செய்யப்பட்டனர். ஆனால் ஒட்டகத்தின் கடிவாளத்தை அவர்கள் விட்டுவிடவில்லை.

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் அந்த போரில் பங்கு பெறவே இல்லை. அவர்கள் ஒருபுறம் ஒதுங்கி விட்டார்கள். ஆனால் ஒரு தீயவன் அன்னார் தொழுது கொண்டிருந்த நிலையில் பின்புறமாக சென்று அன்னாரை ஷஹீதாக்கி விட்டான். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் போர் மைதானத்திலேயே குழப்பவாதிகளின் கைகளால் கொல்லப்பட்டார்கள். போர் மிக தீவிரமானதைக் கண்டபோது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஒட்டகத்தை இங்கிருந்து அகற்றாதவரை போர் முடிவடையாது என்பதை உணர்ந்தபோது சிலர் அன்னாரின் ஒட்டகத்தின் கால்களை வெட்டினார்கள். மேலும் ஒட்டகத்திலிருந்து அன்னாரை இறக்கி தரையில் அமர்த்தினார்கள். அப்போதுதான் போர் ஒரு வழியாக முடிவுக்கு வந்தது.

இந்த சம்பவத்தைப் பார்த்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் முகம் துக்கத்தால் சிவந்து போனது. ஆனால் நடந்ததை அவர்களால் ஒன்றும் செய்ய இயலாமல் போனது. போர் முடிவடைந்த பிறகு கொலையுண்டவர்களில் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் உடலைக் கண்டபோது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு மிகுந்த வேதனை ஏற்பட்டது.

இந்த அனைத்து சம்பவங்களிலிருந்தும் மிகத் தெளிவாக வெளிப்படுவது என்னவென்றால், இந்த போரில் சஹாபாக்களுக்கு எந்த பங்கும் இல்லாமல் இருந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையாளிகளின் தீங்குகள்தான் முக்கிய காரணமாக இருந்தது. ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்த நிலையிலேயே மரணித்தார்கள். ஏனென்றால் தங்களது எண்ணத்தை கைவிட்டு முகம் திருப்பி இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் சேர்ந்திருந்ததாக ஒப்புக் கொண்டார்கள். ஆனால் சில தீயவர்களின் கைகளால் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அந்த கொலையாளிகளை சபித்தார்கள்.

(அன்வாரே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 198–201)

ஒட்டகப் போர் மற்றும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மற்றொரு இடத்தில் கூறுகின்றார்கள்:

உலகில் நபிமார்கள் தோன்றும்போது ஆரம்ப காலகட்டத்தில் அவர்கள் மீது எவர்கள் நம்பிக்கை கொள்கின்றார்களோ அவர்களே பெரியவர்களாக கருதப்படுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம்

## திருக்குர்ஆனிலிருந்து...

அவ்விருவரும் எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்குக் கருணை காட்டாவிடில் நாங்கள் நஷ்டமடைந்தவர்களைச் சார்ந்தவர்களாகி விடுவோம் என்றனர். (7:24)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

(ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் சஅத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சயீது (ரலி) ஆகியோர் பெரியவர்களாக கருதப்பட்டனர் என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் அறிவார். அவர்கள் பெரியவர்களாக கருதப்பட்டதற்கான காரணம் அவர்களுக்கு அதிகமான ஓய்வு கிடைத்து வந்தது என்பதல்ல. மாறாக, அவர்கள் பெரியவர்களாக கருதப்படுவதற்கு காரணம் என்னவென்றால், மார்க்கத்திற்காக அவர்கள் மற்றவர்களை விட அதிகமான துன்பங்களை சகித்துக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகும் உயிருடன் இருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு முஸ்லிம்களிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையாளிகளை நாம் பழிவாங்க வேண்டும் என்று ஒரு கூட்டம் கூறியது. அந்த கூட்டத்தின் தலைவராக ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஆனால் மற்றொரு கூட்டம் இவ்வாறு கூறியது. முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினை ஏற்பட்டுள்ளது.

மனிதர்கள் மரணிக்கவே செய்கின்றனர். நாம் முதலில் முஸ்லிம்களை ஒன்றுசேர்க்க வேண்டும். ஏனென்றால் அப்போதுதான் இஸ்லாத்தின் பொலிவும், அதன் மகத்துவமும் நிலைபெற முடியும் என்று கூறினர். மேலும் அதன் பிறகு நாம் அந்த மக்களை பழிவாங்கலாம் என்றும் அவர்கள் கூறினர். இக்கூட்டத்திற்கு தலைவராக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

இந்த கருத்து வேறுபாடு எந்த அளவுக்கு அதிகரித்து என்றால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஷஹீதாக்கிய நபர்களுக்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அடைக்கலம் வழங்க விரும்புகின்றார்கள் என்று ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும் குற்றம் சுமத்தினர். மேலும் இவர்களுக்கு தங்களின் சொந்த விருப்பமே முதன்மையாக இருக்கின்றது. இஸ்லாத்தின் நன்மையை இவர்களை முன்னிலைபடுத்தவில்லை என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் குற்றம் சுமத்தினார்கள். ஆக கருத்து வேறுபாடு மிக உச்சத்தை எட்டியிருந்தது. பின்னர் தங்களுக்குள் போரும் மூண்டிருந்தது. அதுபோன்ற போரில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் படைக்கு தலைமை தாங்கினார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும் அந்த போரில் பங்கு பெற்றிருந்தார்கள்.

ஏற்கெனவே கூறப்பட்டிருந்ததுபோன்று துவக்கத்தில் அவர்கள் எதிரிகளுடன் இணைந்திருந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கூற்றை செவிமடுத்து போரிலிருந்து விலகி விட்டார்கள். மற்றவர்களும் சமாதானம் செய்து கொள்ள விரும்பினார்கள். ஆனால் எதிரிகளும், நயவஞ்சகர்களும், குழப்பவாதிகளும் குழப்பம் விளைவித்தனர். ஆனால் எவ்வாறிருப்பினும் இவ்வாறு இரண்டு கூட்டம் இருந்தது. இவர்கள் போரில் பங்கு பெற்றார்கள். இரு தரப்பிற்கு மத்தியிலும் போர் நடந்து கொண்டிருந்தது.

அப்போது ஒரு சஹாபி ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களிடம் வந்தார். மேலும் அன்னாரிடம் கூறினார்: தல்ஹாவே! உமக்கு நினைவு இருக்கின்றதா? இன்ன சந்தர்ப்பத்தில் நீரும், நானும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையில் அமர்ந்திருந்தோம். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தல்ஹாவே! ஒரு நேரம் வரும். அப்போது நீர் ஒரு படையில் இருப்பீர். அலி மற்றொரு படையில் இருப்பார். ஆனால் அலி உண்மையில் இருப்பார். நீர் தவறிழைத்திருப்பீர் என்று கூறியது உமக்கு நினைவில் இருக்கிறதா? என்று கேட்டார்கள்.

இதைக்கேட்டபோது ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் கண்கள் திறந்தன. அவர்கள் கூறினார்கள்: ஆம்! எனக்கு இந்த விஷயம் நினைவுக்கு வந்து விட்டது என்று கூறி அப்போதே படையிலிருந்து வெளியேறி வெளியே சென்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றை முழுமை செய்வதற்காக அவர்கள் போரிலிருந்து விலகிச் சென்று கொண்டிருந்தபோது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் படையைச் சார்ந்த ஒருவர் மற்றும் துரதிஷ்டசாலி அன்னாரை பின்புறமிருந்து கத்தியால் குத்தி ஷஹீதாக்கி விட்டான்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தமது இருப்பிடத்தில் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் கொலையாளி இதனால் எனக்கு பெரும் வெகுமதி கிடைக்கும் என்று கருதி ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஓடோடி சென்றார். மேலும் அமீருல் முஃமினீன் அவர்களே! என்று அழைத்து, நான் தங்களின் எதிரியை கொலை செய்த தகவலை உங்களுக்கு கூறுகின்றேன் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கூறினார்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எந்த எதிரி? என்று கேட்டார்கள். அதற்கு அவர், அமீருல் முஃமினீன் அவர்களே! நான் தல்ஹா (ரலி) அவர்களை கொலை செய்து விட்டேன் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: மனிதரே நானும் உமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சார்பாக நற்செய்தி ஒன்றை கூறுகின்றேன். நீர் நரகத்தில் வீசப்படுவீர் என்று கூறினார்கள்.

ஏனென்றால் ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: அப்போது ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் அமர்ந்திருந்தார்கள். நானும் அமர்ந்திருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தல்ஹாவே! நீர் உண்மை மற்றும் நீதிக்காக இழிவை சகிப்பீர். உம்மை ஒருவர் கொலை செய்வார். ஆனால் இறைவன் அவரை நகரத்தில் வீசுவான்.

இந்தப் போரில் ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி) ஆகியோரின் படைகள் ஒருவர் மற்றொருவருக்கு எதிராக நின்றன. அப்போது ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் தனக்கு ஆதரவாக இந்த சான்றுகளை எடுத்துரைத்தார்கள். ஒரு சஹாபி ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸை நினைவூட்டி அன்னார் போரைவிட்டு விலகிச் செல்வதற்கு முன்னால் சான்றுகளை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் படையைச் சார்ந்த ஒரு மனிதர் ஒற்றைக் கை காரரே! சும்மா இரு என்று கூறினார்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(பின்னர்) இதே பூமியில் நீங்கள் வாழ்வீர்கள். இதிலேயே நீங்கள் மரணமடைவீர்கள். மேலும் இதிலிருந்து நீங்கள் வெளியாக்கவும்படுவீர்கள் என்று (அல்லாஹ்) கூறினான். (7:26)

A.Basheer Ahmad, Melapalayam

ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் ஒரு கரம் முற்றிலும் செயலிழந்து இருந்தது. ஒற்றைக் கை காரரே! சும்மா இரு என்று அந்த நபர் கூறியபோது ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் அவரிடம் கூறினார்கள்: நீர் எம்மைப் பார்த்து ஒற்றைக் கை காரரே! சும்மா இரு என்று கூறுகின்றீர். ஆனால் எனது கை எவ்வாறு செயலிழந்து போனது என்று உமக்கு தெரியுமா? என்று கேட்டார்கள்.

உஹது போரில் முஸ்லிம்கள் பாதங்கள் தடுமாறின. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வெறும் 12 நபர்களே எஞ்சியிருந்தனர். அப்போது 3000 நபர்களைக் கொண்ட காஃபிர்களின் படை எங்களை சுற்றி வளைத்திருந்தன. அவர்கள் நாலா புறமிருந்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அம்புகளை பொழிந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டால் அனைத்து பணிகளும் முடிவுபெற்று விடும் என்ற எண்ணத்தில் அவர்கள் அவ்வாறு செய்தனர். அந்த நேரத்தில் நிராகரிப்பாளரின் படையைச் சார்ந்த ஒவ்வொரு நபரின் அம்பும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது.

அப்போது நான் எனது கரத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்திற்கு முன்னால் வைத்தேன். நிராகரிப்பாளர்களின் படையின் அனைத்து அம்புகளும் எனது இந்த கையின் மீதே பட்டது. எந்த அளவுக்கு என்றால் எனது இந்த கை முற்றிலும் செயலிழந்தது. ஆனால் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்திற்கு முன்னால் இருந்து எனது கையை ஒருபோதும் அகற்றவில்லை என்று கூறினார்கள்.

(அயிந்தா வஹி கம்மே இஸ்ஸத் பாயேகி ஜே மாலி வ ஜானி... அன்வாருல் உலூம் தொகுதி 21 பக்கம் 149–151)

ஒட்டகப் போர் சந்தர்ப்பத்தில் ஓரிடத்தில் அல்லாஹ்வை பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த ஒற்றைக் கைக்காரர் கொலை செய்யப்பட்டு விட்டார் என்று நபர் கூறினார். ஒரு சஹாபி அதைக் கேட்டுவிட்டு கூறினார்: துர்பாக்கியசாலியே! அவர் கரம் எவ்வாறு செயலிழந்து போனது என்று உமக்குத் தெரியுமா? உஹது போர் நாளன்று ஒரு தவறான புரிதலின் காரணமாக சஹாபாக்களின் படைகள் போர் மைதானத்திலிருந்து ஓடி விட்டன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் சில மனிதர்கள் மட்டுமே போர் மைதானத்தில் எஞ்சியிருக்கின்றனர் என்பது நிராகரிப்பவர்களுக்கு தெரிய வந்தபோது சுமார் 3000 நபர்களைக் கொண்ட காஃபிர்களின் படைகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நாலா புறமிருந்தும் தாக்குதல் தொடுத்தனர். நூற்றுக்கணக்கான அம்பு எய்யும் வீரர்கள் வில் ஏந்தி நின்றனர். மேலும் தனது அம்புகளின் இலக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை அவர்கள் ஆக்கி இருந்தனர். அம்புகளைப் பொழிந்து அதை சிதைத்து விட வேண்டும் என்று அவர்கள் விரும்பி இருந்தனர்.

அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தை பாதுகாப்பதற்காக தன்னை முன்னிறுத்திய நபர் இந்த தல்ஹா அவர்களே ஆவார்கள். தல்ஹா தனது கரத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நீட்டிவிட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த ஒவ்வொரு அம்பும் ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் கையில் விழுந்தது. இவ்வாறு அம்பு பட்டுக் கொண்டே இருந்தது. எந்த அளவுக்கு என்றால் அதனால் ஏற்பட்ட காயம் சாதாரண காயமாக இருக்கவில்லை. அதிகமான காயத்தின் காரணமாக ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் தோல்பட்டை கீழே இறங்கியது. அன்னாரின் கரம் செயலிழந்து போனது.

எனவே எவரை நீ ஏளனமாக ஒற்றைக் கை காரரே என்று கூறினீரோ அவர் ஒற்றைக் கை காரராக இருப்பது எப்படிப்பட்ட ஓர் அருட்கொடை என்றால் அதன் அருட்களுக்காக எங்களில் ஒவ்வொருவரும் ஏங்கிக் கொண்டிருக்கின்றோம் என்று கூறினார்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 26 பக்கம் 386 குத்பா ஜுமுஆ 28 செப்டம்பர் 1945)

ரபீ பின் ஹராஜ் அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது. நான் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடத்தில் அமர்ந்திருந்தேன். அப்போது இம்ரான் பின் தல்ஹா அவர்கள் வந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு சலாம் கூறினார்கள். அவர்களை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் வரவேற்று, இம்ரான் பின் தல்ஹா அவர்களே! வாருங்கள், வாருங்கள் என்று கூறினார்கள். அப்போது அமீருல் முஃமினீன் அவர்களே! தாங்கள் என்னை வரவேற்கின்றீர்கள். ஆனால் தாங்களோ எனது தந்தையை கொலை செய்து விட்டு அவரின் செல்வத்தை எடுத்து விட்டீர்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: உமது செல்வம் பைத்துல் மால் செல்வத்திலிருந்து தனித்து வைக்கப்பட்டுள்ளது. காலையில் வந்து உங்களது செல்வத்தை எடுத்துச் செல்லலுங்கள் என்று கூறினார்கள்.

மற்றொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. மற்றவர்கள் அதனை எடுத்துச் சென்று விடக்கூடாது என்பதற்காகத்தான் அதனை நான் எனது கட்டுப்பாட்டில் எடுத்தேன் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

மேலும் நான் உமது தந்தையாரை கொலை செய்து விட்டதாக நீர் கூறுகின்றீர்கள். அது தொடர்பாக எனது நம்பிக்கை என்னவென்றால், நானும் உமது தந்தையாரும், இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்ற அந்த நபர்களைச் சார்ந்தவர்களாக இருப்போம்.


அதாவது அல்லாஹ் கூறுகின்றான்: அவர்களில் உள்ளங்களிலுள்ள பகைமையை நாம் அகற்றி விடுவோம். அவர்கள் சகோதரர்களாக திகழ்ந்து ஒருவருக்கு முன்னால் மற்றொருவர் அமர்ந்திருப்பார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 169 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஹம்மது அன்ஸாரி தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார். ஒட்டகப் போர் நாளன்று ஒரு நபர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் வந்தார். மேலும் கூறினார்: தல்ஹா அவர்களின் கொலையாளியை உள்ளே வர அனுமதியுங்கள் என்று கூறினார்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன். அதாவது இந்த கொலையாளிக்கு நரகத்தின் செய்தியை கூறி விடுங்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 169 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஷஹீதானபோது அன்னார் கொலையுண்டு கிடப்பதை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கண்டார்கள். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் முகம் துக்கத்தால் வாடியது. மேலும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் முகத்திலிருந்து மண்ணை துடைத்தார்கள்.

மேலும் கூறினார்கள்: அபூ முஹம்மதே! விண்ணின் நட்சத்திரங்களுக்கு கீழே மண் படிந்து நீர் கிடப்பதைப் பார்த்து எனக்கு மிகவும் வேதனையாக உள்ளது என்று கூறினார்கள்.

பின்னர் அல்லாஹ்விடத்தில் தனது குறைகளையும் வேதனைகளையும் முறையிட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், நான் அல்லாஹ்விடத்தில் எனது குறைகளையும், துக்கத்தையும் முறையிடுகின்றேன் என்று கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களுக்காக கருணைக்கான துஆவை செய்தார்கள். மேலும் இந்த நாளிலிருந்து 20 வருடங்களுக்கு முன்பாகவே நான் மரணித்திருக்கக் கூடாதா என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும், அவர்களுடன் இருந்த தோழர்களும் மிகவும் அழுதார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஒரு நபர் இவ்வாறு கவிதை கூறுவதை கேட்டார்கள். அதன் பொருள் இதுவாகும். அதாவது அவர் ஒரு இளைஞனாக இருந்தார். பெரும் செல்வந்தராக தனது நண்பர்களை அவர் சந்தித்து வந்தார். வறுமை நேரத்தில் அவர்களிடமிருந்து விலகி இருந்தார். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், இந்த கவிதைக்கு பொறுத்தமானவர் அபூ முஹம்மது தல்ஹா பின் உபைத்துல்லாஹ் ஆவார்கள் என்று கூறினார்கள். அல்லாஹ் அன்னார் மீது கருணை காட்டுவானாக.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 87 தல்ஹா பின் உபைதுல்லாஹ் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இங்கு நான் அன்னாரது குறிப்பை நினைவு செய்கின்றேன்.

தற்போது நிலவும் சூழல்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளையும் நான் படித்து விடுகின்றேன்.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் முஃப்தி சாஹிப் அவர்களை நோக்கி கூறினார்கள்: வீடுகளை வெளிச்சமாக வையுங்கள். அது பிளேக் நோய் பரவி வந்த காலமாகும். வீடுகளை மிகவும் சுத்தமாக வையுங்கள். ஆடைகளையும் சுத்தமாக வைத்திருங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பின்னர் கூறினார்கள்: தற்போதைய நாட்கள் மிகவும் கடுமையான நாட்களாகும். காற்று விஷத்தன்மை கொண்டதாக இருக்கிறது. சுத்தமாக வைப்பது சுன்னத் ஆகும். திருக்குர்ஆனிலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது உம்மை சூழ்ந்திருப்பவர்களை தூய்மைப்படுத்துவீராக. இறைவனுக்கு இணை வைத்தலை அழித்து விடுவீராக. (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 273,274)

மேலும் இன்னொரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: எந்த நகரத்தில் மற்றும் கிராமத்தில் பிளேக் நோய் வேகமாக பரவி விட்டதோ அந்த நகரத்து வாசிகள் தங்கள் நகரத்தை விட்டு மற்ற இடங்களுக்கு செல்ல வேண்டாம். தமது வீடுகளையும் அவர்கள் சுத்தமாக வைக்கட்டும். மேலும் அவற்றை வெப்பமாக வையுங்கள். உரிய தற்காப்பு ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள்.

எல்லாவற்றையும் விட அதிகமாக உண்மையான தவ்பா செய்யுங்கள். தூய்மையான மாறுதலை உருவாக்கி இறைவனுடன் சமாதானம் செய்து கொள்ளுங்கள். இரவுகளில் எழுந்து எழுந்து தஹஜ்ஜுத் (தொழுகையில்) துஆ செய்யுங்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்: நீங்கள் உங்களது நிலைகளில் ஏற்படுத்தும் தூய மாறுதல்கள்தான் இறைவனின் தண்டனையிலிருந்து உங்களை பாதுகாக்கும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 234)

அல்லாஹ் இந்த நாட்களில் குறிப்பாக துஆக்களில் அதிக அழுத்தம் கொடுப்பதற்குரிய நற்பாக்கியத்தை ஒவ்வொரு அஹ்மதிக்கும் வழங்குவானாக. அரசாங்கத்தின் வழிகாட்டுதல்களின்படி செயல்படுங்கள். வீடுகளை சுத்தமாக வையுங்கள். வீட்டை கழுவி விடவும் வேண்டும். டெட்டால் போன்றவற்றின் மூலம் ஸ்ப்ரே செய்ய வேண்டும். அது கடைகளில் கிடைக்கின்றது.

அல்லாஹ் அனைவர் மீதும் அருள் செய்வானாக. மேலும் கருணை காட்டுவானாக. எவ்வாறிருப்பினும் குறிப்பாக இந்த நாட்களில் துஆக்களில் சிறப்பான அழுத்தத்தை கொடுங்கள். அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

### நோன்பு வைத்தவாறு பயணம் செய்யலாமா ?

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு நபர் நோன்பு மாதத்தில் பயணத்தின் போது நோன்பு நோற்பது மற்றும் தொழுவது தொடர்பாக வினவினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ரமலானில் பயணத்தின் போது நோன்பு வைக்க வேண்டாம் என்று கூறினார்கள். அதற்கு அந்த நபர், நபிகள் நாயகமே ! எனக்கு நோன்பு வைப்பதற்காக ஆற்றல் இருக்கின்றது என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அவரிடம், நீ அதிக ஆற்றல் மிக்கவரா ? அல்லது அல்லாஹ்வா ? நிச்சயமாக அல்லாஹ் என்னுடைய உம்மத்தைச் சார்ந்த நோயாளிகளுக்கும், பயணிகளுக்கும் ரமலான் மாதத்தில் பயணத்தின் நிலையில் நோன்பு வைக்காமல் இருப்பதை ஸதகாவாக ஆக்கி விடுப்பு வழங்கி இருக்கின்றான்.என்று கூறினார்கள்.

(அல் முஸ்னிஃபுல் ஹாபிஸுல் கபீர் அபி அப்கர் அப்துர் ரஸாக் பின் ஹமாமுஸ் ஸன்ஆனில் ஜஸ்உஸ்ஸானி பக்கம் 565 பாபுஸ் ஸயாம் ஃபிஸ் ஸஃபர்)

### திருக்குர்ஆனிலிருந்து...

ஆதமின் மக்களே! உங்கள் மானத்தை மறைக்கக் கூடியதும் அணிகலனாக இருக்கக் கூடியதுமான ஆடையினை உங்களுக்காக நாம் இறக்கியுள்ளோம். ஆனால் இறையச்சத்தின் ஆடை – அதுதான் சிறந்தது. இது அவர்கள் அறிவுரை பெறுவதற்கான அல்லாஹ்வின் கட்டளைகளைச் சேர்ந்ததாகும். (7:27)

M.Y. Shahul Hameed, Melapalayam

## சதகத்துல் ஃபித்ர் –ன் விகிதாச்சாரம்

அருளுக்குரிய ரமலான் ஏப்ரல் மாதத்தின் இறுதியில் ஆரம்பமாகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

இஸ்லாத்தில் ஒரு ஸாஹ் நெல் (அதாவது 2 கிலோ 750 கிராம்) என்ற விகிதாச்சாரத்திற்கேற்ப சதகத்துல் ஃபித்ர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முழுமையான விகிதாச்சாரப்படி சதகத்துல் ஃபித்ரை அருளுக்குரிய ரமலானின் முதல் பத்திலோ அல்லது இரண்டாம் பத்திலோ செலுத்துவதற்கு ஜமாஅத் சகோதரர்கள் முயற்சி செய்யவும். இந்தியாவிலுள்ள மாநிலங்களில் கோதுமை, அரிசி ஆகியவற்றின் விகிதாச்சாரம் வேறுபடுவதால் உள்ளூர் விலைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாச்சாரத்தின் படி (2 கிலோ 750 கிராம் நெல்) சதகத்துல் ஃபித்ர் தொகையை செலுத்தவும்.

பஞ்சாப் மாநிலத்தில் இவ்வருடம் ஸதக்கத்துல் ஃபித்ரின் விகிதாச்சாரம் 55 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் ஜமாஅத்தில் ஏழைகள் மற்றும் தேவையுடையவர்கள் இருப்பார்களாயின் சதகத்துல் ஃபித்ரின் ஒட்டுமொத்த தொகையில் 90 சதவிகிதம் தொகையை உள்ளூர் செயற்குழுவின் ஆலோசனை மற்றும் முடிவுக்குப் பிறகு விநியோகிக்கலாம். மீதமுள்ள தொகையை தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும்.

எந்த ஜமாஅத்தில் ஏழைகளும், தேவையுடையவர்களும் இல்லையோ அந்நிலையில் அந்த ஜமாஅத்தில் வசூல் செய்யப்பட்ட தொகையை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஜமாஅத்தின் வங்கிக் கணக்கிற்கு அனுப்ப வேண்டும்.

சதகத்துல் ஃபித்ர் தொகையை பள்ளிவாசலின் அத்தியாவசியத் தேவைக்காக செலவு செய்வதற்கு அனுமதி கிடையாது என்பதை நினைவில் கொள்ளவும்.

## ஈத் ஃபண்ட்

இந்த சந்தா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலிருந்தே இருக்கின்றது. இதன் நோக்கம், மகிழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் மனிதன் தனக்காக ஆடைகள், உணவு மற்றும் விருந்து உபசரிப்பிற்காக பல்வேறு வகையான செலவுகளை செய்கின்றான். மற்றவர்களுக்கு அன்பளிப்பும் கொடுக்கின்றான்.

அதேபோன்று அந்த மகிழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் அவனுக்கு மார்க்கத்தின் குறிக்கோளும் நினைவில் இருக்க வேண்டும். அஹ்மதி உறுப்பினர்கள் பைஅத் உடன்படிக்கையில், உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்று உடன்படிக்கை செய்துள்ளனர்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியிடமும் எதிர்பார்க்கப்படுவது என்னவென்றால், இந்த மகிழ்ச்சிகரமான பண்டிகையின்போது மார்க்கத்தின் குறிக்கோளையும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் சம்பாதிக்கக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியும் இதற்காக ஒரு ரூபாய் ஈத் ஃபண்டாக கொடுத்து வந்துள்ளார்கள். தற்காலத்தில் ஒரு ரூபாய்க்கு எந்த மதிப்பும் இல்லை. எனவே உங்களது சக்திக்குட்பட்டவாறு நீங்கள் வழங்குங்கள்.

ஆலோசனை என்னவென்றால், ஈத் நாளன்று எவ்வளவு தொகை செலவு செய்யப்படுகிறதோ அதில் பாதி தொகையை இதற்காக செலுத்தவும். ஈத் பண்ட் தொகையை பெருநாளைக்கு முன்பாக எப்போது வேண்டுமானாலும் செலுத்தலாம்.

இது தலைமையகத்திற்குரிய சந்தாவாகும். முழுத் தொகையையும் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா வங்கிக் கணக்கில் செலுத்துவது அவசியமாகும். இந்த தொகையிலிருந்து உள்ளூர் அளவில் செலவு செய்வதற்கு அனுமதி கிடையாது.

– நாஸிர் பைத்துல் மால் ஆமத், காதியான்

### முக்கிய அறிவிப்பு

### ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு கடிதம் எழுதும் அனைத்து ஜமாஅத் சகோதர சகோதரிகளுக்கும் அறிவிக்கப்படுவதாவது: வழக்கம்போல் தங்களின் அனைத்துக் கடிதங்களும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்களுக்கு முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. எனினும் கொரோனா வைரஸ் தொடர்பாக இன்றைய நாட்களில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் கடிதங்களுக்கு பதில் எழுதும் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த அனைத்துக் கடிதங்களுக்கும் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக பதில் அனுப்புவது சாத்தியமில்லை. ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்.

அல்லாஹ் கருணையும், அருளும் புரிவானாக. இந்தத் தொற்று நோய் மற்றும் ஏனைய சிரமங்கள் மற்றும் பிரச்சனைகள் மற்றும் கஷ்டங்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பானாக. அனைவரையும் தனது பாதுகாப்பிலும் அடைக்கலத்திலும் வைப்பானாக. மேலும் எப்பொழுதும் அவனது அன்பின் பார்வை உங்கள் மீது இருக்கட்டுமாக.

(முனீர் அஹ்மது ஜாவீது – தனிச்செயலர்)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஸ்தாபகர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது காலத்தைப் பார்த்தாலும் கூட, அதாவது அவர்களது தைரியம் அல்லது அவர்களது ஆன்மீக உண்மை மற்றும் பற்று ஆகியவை எதுவரை அவர்களை பின்பற்றியவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைப் பார்க்கும்போது தீய நடத்தையுள்ள ஒருவரை சரி செய்வது எந்த அளவு கடினமான விஷயம்? என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும். வேரூன்றிவிட்ட பழக்கங்களை அழித்து விடுவது என்பது சாத்தியமானதாகும்.

ஆனால், நமது புனித நபி (ஸல்) அவர்கள் விலங்குகளை விட மோசமானவர்களாக இருந்த ஆயிரக்கணக்கான மனிதர்களை சரிசெய்து விட்டார்கள். சிலர் விலங்குகளைப் போன்றே தாய்மார்கள் மற்றும் சகோதரிகளுக்கிடையில் வித்தியாசம் தெரியாமல் நடந்து கொள்பவர்களாய் இருந்தனர். அனாதைகளின் செல்வங்களை விழுங்குபவர்களாகவும் இறந்துபோனவர்களின் செல்வங்களை விழுங்குபவர்களாகவும் அவர்கள் இருந்தனர். அவர்களில் சிலர் நட்சத்திரங்களை வணங்குபவர்களாகவும், சிலர் நாத்திகர்களாகவும், சிலர் பஞ்ச பூதங்களை வணங்குபவர்களாகவும் இருந்தனர். அரபு தீபகற்பம் என்னவாக இருந்தது? அது மதங்களின் தொகுப்பை தன்னகத்தே கொண்டதாக இருந்தது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 22–23; 2003 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

**இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)**

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 07 May 2020 Issue No. 19

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

இன்னும் சொல்வதென்றால் இன்று உலகம் எந்த அளவுக்கு ஒன்று மற்றொன்றுடன் சார்ந்திருக்கின்றது என்றால் ஒரு இடத்தில் இழைக்கப்படுகின்ற அநீதிகளின் விளைவுகள் மற்ற நாடுகளையும் சென்றடைகின்றது. மேலும் கடந்த காலங்களில் நாம் இத்தகைய பல்வேறு உதாரணங்களை கண்டிருக்கின்றோம்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: உண்மையாகவே நாம் நமது தனிப்பட்ட வாழ்க்கையிலும், ஒட்டுமொத்த அளவிலும் அமைதியினை விரும்புகின்றோம் என்றால் பிறகு நாம் நமக்காக எதை விரும்புகின்றோமோ அதையே மற்றவர்களுக்காகவும் விரும்ப வேண்டும். நான் இதற்கு முன்பும் எடுத்துக் கூறினேன். அதாவது இவ்விஷயம் உலகத்தில் உண்மையான அமைதி நிலைபெறுவதற்கான அடிப்படையான தத்துவமாகும்.

மார்க்கத்தைப் பொறுத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த போதனையை வழங்கியுள்ளார்கள். அதாவது உண்மையான அமைதியை நிலைநாட்டுவதற்காக மனித இனம் இறைவன் மீது நம்பிக்கை கொள்வது அவசியமாகும். அவன் அமைதியை வழங்கக் கூடியவன் ஆவான். மகத்துவமிக்கவன் ஆவான். கண்ணியத்திற்குரியவன் ஆவான். பிறகு அவனது அழகிய பண்புகளை நமது வாழ்க்கையின் அங்கமாக ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இதன் பொருள் என்னவென்றால், மனித இனம் அமைதியை நிலைநாட்டுவதற்காக தனது சுய லாபத்தை முன் வைப்பதற்கு பகரமாக கலப்பற்ற உள்ளத்துடன் முயற்சி செய்ய வேண்டும். நிச்சயமாக இன்றைய உலகில் பெரும்பான்மையான கருத்து வேறுபாடுகளுக்கு அடிப்படையான காரணம் இதுவே ஆகும். அதாவது சம்பந்தப்பட்ட கூட்டத்தினரின் எண்ணம் கலப்பற்றதாக இல்லாமல் இருந்தது. அவர்களது செயல்களிலும், கூற்றுக்களிலும் வெளிப்படையான முரண்பாடுகள் இருக்கின்றது. மனிதனது செயல்கள் அவனது கூற்றுக்கேற்ப அமையவில்லை என்றால் பிறகு ஒருபோதும் அமைதி நிலைபெற முடியாது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு அரசாங்கமும், ஒவ்வொரு அரசியல்வாதியும் அவர் அமெரிக்காவைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி; சீனாவைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி; ரஷ்யாவைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி; ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி; முஸ்லிம் நாடுகளைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி அல்லது வேறு ஏதாவதொரு இடத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, இந்த அனைத்து போர்கள் மற்றும் இரத்தம் சிந்துதலையும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம் நாடுகளில் குழப்பம் ஏற்பட்டாலும் அல்லது வேறு ஏதாவதொரு நாடுகளில் குழப்பம் ஏற்பட்டாலும் அதற்கு இஸ்லாத்தின் போதனைகளுடன் எந்த தொடர்பும் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மாறாக, இதன் உண்மையான காரணம் என்னவென்றால், ஒருபுறம் சுயநலம் கொண்ட வழிகாட்டிகள் அல்லது அரசாங்கங்களின் சுயநலம் ஆகும். மற்றொரு புறம், கிளர்ச்சி மற்றும் தனி நாட்டை விரும்புகின்ற கூட்டத்தினர் ஆவர்.

இன்றைய நாட்களில் குழப்பங்களின் தலைமையகமாக முஸ்லிம் நாடுகள் இருக்கின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லைதான். ஆனால் முஸ்லிம் அல்லாத நாடுகள் இதற்கான தீர்வை கூறுவதற்கு பகரமாக சீர்குலைந்திருக்கின்ற நிலைமைகளை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது என்பதையும் எவராலும் மறுக்க முடியாது. தீவிரவாதத்தை விரும்புகின்ற இவர்களுக்கு இஸ்லாமிய போதனை வழிகாட்டுகின்றது என்று கூறப்படுகிறது. ஆனால் இதில் எவ்வித உண்மையும் கிடையாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நான் கூறியது போன்று, அல்லாஹ் அமைதி மற்றும் சாந்தியின் பிறப்பிடமாக இருக்கின்றான். மேலும் அவன் அனைத்து படைப்பினங்களையும் பரிபாலிக்கக் கூடியவனாக இருக்கின்றான். இதனைப் பற்றிய குறிப்பு திருக்குர்ஆனில் முதல் அதிகாரத்தில் காணக் கிடைக்கின்றது. அவ்வாறிருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் பிளவை ஏற்படுத்துவதற்கான விதையை விதைத்தார்கள் என்பதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது முழு வாழ்நாளிலும் பல்வேறு சமுதாயங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதன் பக்கம் ஊக்குவித்தார்கள். மேலும் சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்திலும், வீட்டிலிருந்து உலகளாவிய தொடர்புகள் வரை அமைதியை நிலைநாட்டுவதற்கு அழுத்தம் கொடுத்தார்கள்.

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனையாக மட்டும் இருக்கவில்லை. மாறாக பெருமானார் (ஸல்) அவர்கள் இதன்படி செயல்பட்டும் வந்தார்கள். ஆரம்ப காலத்திலிருந்தே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியின் தூதுச் செய்தியை பரப்பினார்கள். மேலும் சகிப்புத்தன்மை மற்றும் சமூகத்தில் ஒற்றுமையுடன் இருப்பது ஆகியவற்றை ஊக்குவித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அனைத்து மக்களுக்காகவும் அவர் எந்த இனத்தையோ அல்லது மார்க்கத்தைச்யோ சார்ந்தவராக இருந்தாலும், அவர் அமைதியுடன் இருக்க வேண்டும் என்றும் எப்போதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றே விரும்புகின்றான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இந்த குற்றச்சாட்டு பெரும்பாலும் செய்யப்படுகின்றது. அதாவது ஆரம்பகால முஸ்லிம்கள் போர் செய்ய துவங்கினார்கள். மேலும் அவர்கள் மற்றவர்களின் கொள்கைகளை சகித்துக் கொள்ள மாட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஆனால் பகைமையிலிருந்து விலகி நாம் இஸ்லாமிய வரலாற்றை பார்ப்போமென்றால், இந்த குற்றச்சாட்டு பொய்யானதும், தவறான குற்றச்சாட்டும் ஆகும் என்பதே நிரூபணமாகின்றது.

**(உருது பத்ர், 31 அக்டோபர் & 7 நவம்பர் 2019)**

*(தொடரும்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad